1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தருவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அதிகாரிகளிடம் அறிக்கையைப் பெற்றதற்குப் பின்னால் we have substantiated through other officers also within the department முனிசிப்பல் எஞ்ஜினியர் சொல்லியிருக்கிறார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நேற்று மாஸ் டிபார்ட்மென்டிலும் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்படி எல்லாம் சொல்லுவார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காகத்தான் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். கடந்த மாதம் இதே புகாரைக் கொடுத்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வறட்சி நிவாரண நிதியிலிருந்து 2.70 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. லாரிகளில் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டிருக் கிறது. ஏதோ அரசியல் முக்கியத்துவத்திற்காகவோ அல்லது விளம்பரத்திற்காகவோ இப்படி ஒன்றையுமே செய்யவில்லை, டானரிக்கும், ஃபாக்டரிக்கும் அனுப்பப்பட்டது என்று சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அமைச்சர் அதற்குப் பதில் சொல்கிறார். நீங்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். அமைச்சர் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: Even now lorries are plying on the streets. ஒரு மாதத்திற்கு 2.70 இலட்சம் ரூபாய் குடி தண்ணீருக்காக மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைத் தெரிந்து, அதன் அடிப்படையிலேதான் வேலூர் நகரின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த அரசு சுழல் நிதியிலிருந்து 9.50 இலட்சம் ரூபாயை வழங்கி, அந்த நகருக்கு நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்துவிட்டது. Investigation is over and this government will definitely take up this scheme to solve this problem.

(ஊ) ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் காலதாமதமாக நிறைவேற்றப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர், தாரமங்கலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மேட்டூர் அணை அருகில் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சேலம், 11 நகரங்கள் மற்றும் 264 வழியோர கிராமங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பணிகளும் முடியும் தருவாயில் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பொதுவாக அமைக்கப்பட இருக்கும் தலைமைப் பணியிடம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் 97 விழுக்காடுகள் முடிக்கப்பட்டு விட்டது, மீதமுள்ள வேலைகள் டிசம்பர் மாத முடிவுக்குள் முடிக்கப்பட்டு இத்திட்டம் முழுப்பயனுக்கு கொண்டு வரப்படவுள்ளது.

இப்பிரதான திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும் பொழுது 264 வழியோர கிராமங்களின் குடிநீர் விநியோகம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட 264 வழியோர கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 9 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, 10 நீரேற்று நிலையங்கள், 266.60 கி.மீ. கிளைப் பிரதானக் குழாய்கள் மற்றும் 104 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

98 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணியில் இதுவரை 45 சதவிகித வேலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் யாவும் டிசம்பர் 1993-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஓமலூர் மற்றும் தாரமங்கலம் தொகுதியைச் சார்ந்த கிராமங்களும் டிசம்பர் 1993ல் குடிநீர் பெறும்.

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

மேட்டூர் தொகுதியைச் சார்ந்த ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் 11 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க தனியான திட்டம் ஒன்று ரூ. 367.17 இலட்சத்திற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான குடிநீரும் உலக வங்கித் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள நீரேற்று பிரதான குழாயிலிருந்து எடுக்கப்படவுள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை மேட்டூர், ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றியது. நான் கேட்டிருக்கிற கேள்வி, ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க தனியாக, ஒரு இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது ; அதைப் பற்றியது. அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் என்னுடைய கவன ஈர்ப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற கேள்வி மேட்டூர் அணையிலிருந்து ஓமலூர் தொகுதி, தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் தொகுதி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே ஏற்படும் காலதாமதம் பற்றிக் கேட்டிருக்கிறார். மேட்டூர் அணையிலிருந்து ஒரே ஒரு திட்டத்தைத்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் தொகுதிகளிலுள்ள வழியோரக் கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 11 நகரங்கள் உள்ளடங்கியது இந்தத் திட்டம். அடுத்ததாக சுமார் 264 வழியோரக் கிராமங்கள் பயன் படவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 60 கோடி ரூபாய் அளவிலே ஓமலூர் பகுதியிலும் சரி, தாரமங்கலம் பகுதியிலும் சரி, மேட்டூர் தொகுதியிலே ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி, தாரமங்கலம் மற்றும் பதினோரு வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக தனியாக ஒரு திட்டமும் இந்தத் திட்டத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப் பணிகளும் விரைவாக உடனடியாகத் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். இது போதுமானது என்று கருதுகிறேன்.